**செய்தி வெளியீடு எண்: 340** **நாள் : 27.06.2014**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (27.6.2014) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், பல்லடம் – திருப்பூர் பிரதான சாலையில் வெட்டுப்பட்டான் குட்டை என்ற இடத்தில் 27.5.2014 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த சந்திரசேகர் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் – திருப்பூர் பிரதான சாலையில் வெட்டுப்பட்டான் குட்டை என்ற இடத்தில் 27.5.2014 அன்ற பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், செந்தூரரான் காலனியைச் சேர்ந்த திரு பால்ராஜ் என்பவரின் மகன் சந்திரசேகர் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 31.5.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கிட 5.6.2014 அன்று உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி, சாலை விபத்தில் உயிரிழந்த சந்திரசேகர் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி, ஆறுதல் கூறினார்கள்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 27.6.2014**